# 'பஹ்ர் ஆம்' பித்தத்

# என்று கூறுபவர்களுக்கு ஒரு விளக்கம்

**தனிச் சுற்றுக்கு மட்டும்**

வெளியிடுபவர்.

**மர்ஹூம் பக்கீரா மனமாஸாஹிபா பீபி**
குடும்பத்தினர்
பணகுடி 627 109, நெல்லை மாவட்டம்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

# 'பஹர் ஆம்' பித்தத் என்று கூறுபவர்களுக்கு விளக்கம்

''பஹர வைஸ் விலாயத் முஹம்மதியா கஸீதா பராயே குல் காஸ் ஒ ஆம்'' இவ்வாக்கியத்தின் சுருக்கம் 'பஹர் ஆம்' என தற்போது அழைக்கப்படுகிறது. இதன் விளக்கம் குறிப்பிட்ட நபர்கள் கூடும் சபையில் விலாயத்தே மஹ்மூதியின் மூலம், தான் பெற்ற மறைவான இறை அருளின் நற்பயனை அக்கூட்டத்தினருக்கு பங்கிட்டு தருவதாகும். 'பஹர் ஆம்' என்பதன் பொருள் 'பஹர்' என்பது பங்கிடுதல், என்றும் 'ஆம்' என்பது தமது பிரிவை சார்ந்த அனை வரும் என்பதாகும். இறை அருள் பெற்ற தகுதி வாய்ந்த மார்க்க குருக்களிடம பயிற்சி பெற்று அவர்களால் முழு தகுதி பெற்றவர் என அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்ட முர்ஷித் எனும் குருக்கள் அல்லது தனது குருக்களது (முர்ஷித்) அனுமதி பெறப்பட்ட 'துனியா தரக்' செய்த பக்கீர்கள் போன்றோர் மட்டுமே இத்தகு பங்கீடு செய்ய தகுதி வாய்ந்தவர்கள் ஆவர்.

ரஸூலே கரீம் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு (அலை) அவர்களது காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் வருமாறு - ஹஸரத் சையதினா அபுஹுரைரா (ரஸி) நபிகள் நாயகத்தின் ஒரு சஹாபி. ஒரு நாள் அபுஹுரைரா (ரஸி) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தான் நபி பெருமானாரின் மார்க்க விளக்கங்களை கவனமாக கேட்ட போதிலும் அவற்றை நினைவு கூற முடியவில்லை என குறைபட்டுக் கொண்டார் நபிகள் நாயகம் (ஸல்) அபுஹுரைரா (ரஸி)யின் மேல்சால்வையை தரையில் விரிக்குமாறு கூற அவரும் தனது சால்வையை விரித்தார் நபிபெருமான் (ஸல்) தனது சால்வை யில் உள்ள குவியலிலிருந்து தனது இரு கரங்களை கூப்பி ஏதோ ஒரு பொருளை எடுத்து அந்த சால்வையில் போட்டது போன்ற பாவனை செய்து அதை எடுத்துக்கொள்ளுமாறு அவரிடம் கூறினார் கள். அபுஹுரைரா (ரஸி) யும் சால்வையை பயபக்தியுடன் சுருட்டி கண்களில் ஒற்றி எடுத்துச்சென்றார். எந்த பொருளும் தராதபோதிலும் பொருளை நபிபெருமான் (ஸல்) அவர்களிடமிருந்து அபுஹுரைரா (ரஸி) வாங்கிய உணர்வுடன் பயபக்தியுடன் எடுத்துச் சென்றார். அது முதல் ஹஸ்ரத் அபுஹுரைராவின் ஞாபகமறதி அறவே நீங்கி நல்ல நினைவாற்றலை பெற்றதாக அவர் தெரிவித்தார். இம்முறை, 'விலாயத்தே முஹம்மதியில்' தான் பெற்ற நற்கருமங்களின் பயனை, பெறுபவர் அதனால் வெகு தாராளமாக பயன் பெறும் வகையில் பங்கிட்டு வழங்குவது ஆகும்.

இவ்வாறு காணப்படாத ஒன்றை ரசூலே கரீம் முஹம்மத் முஸ்தபா (ஸல்) தர ஹஸ்ரத் அபுஹுரைரா (ரஸி) அதனை பயபக்தி-யுடன் பெற்றார். இந்நிகழ்ச்சியின் போது தரப்பட்ட பொருளைப் பற்றி ரசூலேகரீம் ஸல்) அவர்களும் அதனைப்பெற்ற ஹஸ்ரத் அபுஹுரைரா (ரஸி) உம் மட்டுமே தெரிந்திருந்தனர். வழங்கியவரோ அல்லாவின் ரஸூல், பெற்றவரோ அந்த ரஸூலின் நெருங்கிய ஸஹாபி. ரசூலேகரீம் (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட மெஞ்ஞானப் பொருளை ஹஸ்ரத் அபுஹுரைரா (ரஸி) பெற்றபின்பு அவரது ஞாபக சக்தி அபரீத மாகியது இதற்கு சாட்சியாக நம் முன் பல ஹதீசுகள் உள்ளன. இவ் வாறாக தான் பெற்ற நற்கருமங்களின் பயனை தமது சஹாபிகள் பெற்று பயனடையும்படி நபிகள் நாயகம் (ஸல்) சில குறிப்பிட்ட சஹாபிகளுக்கு அவரவது தேவைக்கேற்ப வழங்கி வந்தார்கள்.

காலப்போக்கில் இறைவனின் நல்லடியார்கள், வலியுல்லாக்கள் முரிஷித்துகள், நபிகள் நாயகம் (ஸல்) லின் முறையை பின்பற்றி தாம் பெற்ற நற்கருமங்களின் பயனை பிறருக்கு வழங்கி வந்தார்கள், சாம் பிராணி புகையின் நறுமணத்துடன் கூடிய குடிநீர் அல்லது நேர்ந்து தரப்பட்ட உணவு பண்டங்கள் மூலமாக அது வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் நற்கருமங்களின் பயனை எல்லோருக்கும் வழங்கும் முறை கிடையாது. இமாமனா மஹதிய மாவூத் (அலை) ஸிகரே கபி, தீதாரே குதா (இறைவனை காணல்) போன்ற ஒரு சில சஹாபிகள் மட்டுமே பெற்ற நற்கருமங்களை எவ்வாறு எல்லோரும் பெற்று பயனடையும் வழி முறையை வகுத்து தந்தார்களோ அதே போல் விலாயத்தே முஹம்மதியின் பெற்ற மறைவான இறை அருளின் நற் பயனை எல்லா மூமின்கள் பெறும் வகையில் பங்கிட்டு தந்தார்கள் (பஹரே வைஸ் விலாயத் முஹம்மதியா முகையதை பி ஆம்)

இமாமனா மஹதிய மாவூத் (அலை) தான் பெற்ற நற்கருமங்-களின் பயனை முதன் முதலாக தமது மனைவி பீபீ அல்ஹாததி (ரஸி) அவர்களுக்கு தந்தார்கள். மஹதவிகள் அனைவரும் பீபீ அல்ஹா ததியை அன்னை என்று கருதியதால் இமாமனாவும், பீபீயும் மஹதவி களை குழந்தைகளாக பாவித்து அவர்களை பிள்ளைகள் என்றே அழைப்பார்கள் அன்னை அல்ஹாததி மரணப்படுக்கையில் இருந்தார் கள். இமாமனா பீபீயிடம் தமது பிள்ளைகளுக்கு என்ன தெரிவிக்க விரும்புகின்றீர்கள் எனக் கேட்டார்கள் அதற்கு அன்னை பீபீ அல்ஹாததி (ரஸி) அவர்கள் "என்னிடம் என்ன உண்டு என்ன இல்லை என்பதை மீரான்ஜியாகிய தாங்கள் அறிந்துள்ளீர்கள். என்று

முதல் தங்களிடம் தஸ்தீக் செய்தேனோ அன்று முதல் எனது தொழு-கைகளில் அல்லாவின் காட்சியை (தீதார்) காணாது சிஸ்தா செய்த தில்லை எனக்கு கிடைத்த இந்த அருட்கொடையை மரபு உரிமையாக விட்டுச் செல்கிறேன். இதன்பயனை நமதுபிள்ளைகள் (ஸஹாபாக்கள்) அனைவருக்கும் பங்கிடு செய்து விடுவீர்களாக'' என்றார். அதுமுதல் இந்தவழிமுறை எல்லாமுரீதுகளும் பயனடையும் வகையில் பொதுப்படையாக்கப்பட்டது இமாமனா மஹதிய மாவூத் (அலை) யை தொடர்ந்து எல்லாமுர்ஷித்களும் தமதுஆழ்ந்த இறைஈடுபாட்டின் மூலம் தாம் பெற்ற நற்கருமங்களின் பயனை தமது எல்லா முரீதுகளுக்கும் பங்கிடுவதை நடத்தி வருகின்றனர்.

கடந்த காலங்களில் மக்கள் ஆன்மீக ஈடுபாட்டில் ஆழ்ந்து ஈடுபாடு கொண்டிருந்ததால், தருபவருக்கும், பெருபவருக்கும், நற்கருமங்களின் பயனை அறியும் ஆன்மீக அறிவு இருந்தது காலப்-போக்கில் மக்கள் உலகவாழ்க்கையில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டதோடு மட்டுமல்லாமல், மார்க்க வழிகளை பின்பற்றுவதில் மாறுபட்ட கருத்துகளும், வழிமுறைகளும் தோன்றியிருந்ததால் மஹதவி முர்ஷித்துகள் ஒன்றாக கூடி ஆலோசித்து கண்ணுக்கு புலப்படும் மக்களால் உண்ணப்படும் பொருட்கள் மூலம் இந்த பங்கீட்டு முறையை கடைபிடிப்பதென முடிவு செய்தனர். அன்று எவ்வாறு ஹஸரத் அபுஹுரைரா (ரஸி) தனது சால்வையை தரையில் விரித்து ரஸுலே கரீம் (ஸல்) அவர்களிடமிருந்து பயபக்தியுடன் அந்த அமானுதப் பொருளை காணக்கிடைக்காத பொக்கிஷம் போன்று பெற்றாரோ அவ்வாரே தனது இடைவிடாத ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் முர்ஷித்பெற்ற ஆண்டவனின் அருளை உணவுப்பொருள் மூலம் தமது முரீதுகளுக்கு வழங்க முடிவு செய்தனர். உண்மையிலேயே பஹாஆமின் போது பங்கிடப்படுவது வெறும் உணவுப்பொருள் அல்ல மாறாக வழங்கப்படுவது முர்ஷித்களால் பெற்றநற்கருமங்களின் பயன் என்பதை நாம் உணர வேண்டும்.

அஹ்மத் நகரின் அருகில் கப்டோன்ச் எனும் ஊரில் நல்லடக்க மாகியுள்ள ஹஸ்ரத் மாலிக் அல்ஹதாத் கலீபகுரு கோதுமை ரொட்டி களை தூள்செய்து பஹர் ஆமில் பங்கிட்டு முதன் முதலாக தொடக்கி வைத்தார்கள் இப்பங்கிட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கோதுமைரொட்டித் துண்டு 'நான்' என்றசொல்லையும் தூள்என்பதைக் குறிக்கும் 'ரேஸா' ஆகிய இரண்டையும் சேர்த்து 'நான் ரேஸா' என அழைக்கப்பட்டது.

நாளடைவில் இச்சொல் மறுவி 'நாரிஸா' ஆகியது. நாளடைவில் அவித்த பயறு வகைகள், இனிப்புகள், வாழைப்பழங்கள் போன்றவை பங்கிடப்பட்ட போதிலும் 'நாரிஸா' என்ற பெயர் பயன்படுகின்றது

பஹர் ஆம் அன்று குறிப்பிட்ட நேரத்தில் குடிநீர் கிடைக்கும் இடத்தில் எல்லோரும் கூடுவார்கள். மண்கலயங்களில் சுத்தமான குடிநீரை நிரப்பி கைகளில் ஏந்தி முதலில் முர்ஷித் அவரைத் தொடர்ந்து அவரது கலீபா, பக்கீர்கள் மற்றும் ஸஹாபாக்கள் பள்ளி வாசலுக்கு சென்று அக்கலயங்களை வைப்பார்கள் அந்த நீருக்கு சாம்பிராணி புகை கொடுத்து குடிக்கவும், எஞ்சியதை ஒஸு செய்யவும் பயன்படுத்துவார்கள். பின்பு முர்ஷித்தின் முன் அனை வரும் வட்டமாக நிறக முர்ஷித் சலாம் கூறுவார். மற்றவர்கள் ஸலாமுக்கு பதிலளிப்பார்கள்.

முர்ஷித்தின் வீட்டின் நாரிஸாவுடன் முரீதுகளில் வீடுகளின் நாரிஸாகவும் ஒன்றாக கலந்து நாரிஸா பங்கிடப்படும். சில இடங்களில் நாரிஸா வழங்கிய பின்பு சலாம் கூறப்படும். சில முக்கியமான பஹர் ஆம்களில் கொண்டு வரப்டடும் நீர் அந்த உருஸ்களின் சமையலுக்கு பயன்படுத்துவார்கள். உருஸ் சமையலுக்கு தேவையான விறகை, ஏழை பணக்காரன், தொழிலாளி முதலாளி என்ற பாகுபாடு இன்றி எல்லோரும் தலையில் சுமந்து சமைக்கும் இடத்திற்கு கொண்டு சேர்ப்பார்கள். விறகு சுமப்பது, நீர் கொண்டு வருவது போன்றவை ரஸுலே கரீம் (ஸல்) அவர்களால் கடைப்பிடிக்கப் பட்டதால் இதுவும் ஒரு சுன்னத் ஆகும்.

நபிகள் பெருமான் (ஸல்) ஒருமுறை தனது ஸஹாபிகளுடன் பயணம் மேற்கொண்டார்கள். உணவு தயாரிக்க ஆடு ஒன்றை கொண்டு வரும்படி கூறினார்கள் ஒரு சஹாபி ஆடுகொண்டு வரும் பொறுப்பை ஏற்றார். இன்னொருவர் அதை ஹலால் செய்வதையும், மற்றொருவர் தோல் உரிக்கவும், மற்றொறுவர் சமையல் செய்யும் பொறுப்பை ஏற்றனர். ரசூலே கரீம் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு (அலை) தமது பங்கிற்கு விறகு எடுத்து வருவதாக கூறினார்கள் நபிகள் நாயகத்தின் மீது மட்டில்லா அன்பு கொண்ட ஸஹாபிகள் விறகு கொண்டு வரும் வேலையை தாங்களேசெய்வதாக கூறினார். அதற்கு நபிபெருமான் (ஸல்) அவர்கள் வேலை செய்யாமலிருப்பது, தோழர்கள் உழைக்கும் போது ஒருவர் உழைக்காமலிருப்பது அல்லாவின்

விருப்பத்திற்கு மாறானது என பதிலளித்து சமையலுக்கான விறகை சேகரித்து தனது தலையில் சுமந்து வந்தார்கள் (ஆதாரம்: ஐஹ்ரே இஸ்லாம் பக்கம் 29). நபிகள் நாயகம் (ஸல்) விறகை தலையில் சுமந்தது போல் நாமும் சுமப்பது சுன்னத் ஆகும். அதை நாம் கடைப்பிடித்துவருகிறோம். அல்ஹம்துலில்லாஹ். நறுமணம் நபிகள்நாயகத்திற்கு மிக விருப்பமானது என்பதால் நாம் தண்ணிரில் சாம்பிராணி புகையினை பிடித்து அந்த நறுமணமுள்ள நீரை உருஸ், பஹ்ர் ஆம் போன்ற மார்க்க சடங்குகளில் பயன்படுத்துகிறோம்.

ஒரு சமயம் மஹதவிகள் அவரவாது தாயராவில் உருஸ் செய்தனர். அவரவரது தகுதிக்கேற்ப சமைத்து உருஸ் செய்தனர். ஆனால் பந்தகிமியா ஷாநிஸாம் (ரஸி) அவர்களது தாயராவில் இல்லாமையும் வறுமையும் காணப்பட்டது. ஸஹாபிகள் பசியால் வாடிக் கொண்டிருந்தனர் உருஸ் செய்வதற்கென சமைக்க தாயராவில் எதுவும் இல்லை ஹஸ்ரத் ஷாநிஸாம் (ரஸி) அவர்கள் தாயராவிலுள்ளவர்களிடம் குடிநீரை கொண்டு வரச்சொல்லி, அந்நீருக்கு சாம்பிராணி புகையை கலந்து நறுமணம் வீசச் செய்தார்கள். நறுமணம் வீசும் அந்நீரைக் கொண்டு உருஸ் செய்து தமது தாயரா வாசிகளுக்கு வழங்கினார்கள். அன்று இரவு முஹம்மதைன், காதமைனின் அர்வாக்கள் ஷாநிஸாம் (ரஸி) அவர்களிடம் வந்து உருஸின் போது நியாஸ் செய்ததை எற்றுக்கொண்டதாக ஆன்மீகமாக தெரிவித்து சென்றனர். இந்த விபரம் ஆன்மீக ஞானம் பெற்ற பிற தாயராக்களிலிருந்த முர்ஷித்துகளுக்கும் தெரிய வந்தது. அந்த அளவு சிறப்பைப் பெற ஷாநிஸாம் (ரஸி) அவர்கள் செய்த உருஸின் மகிமையை அறிய அவரது தாயராவிற்கு நேரில் வந்தனர். அங்கு அவர்கள் கண்டது இல்லாமை, வறுமை, பசி, அங்கு அல்லாவின் நாமத்தை தவிர வேறு எதுவும் இல்லை என்பதையும், ஹஸ்ரத் ஷாநிஸாம் (ரஸி) நறுமணம் வீசும் குடிநீரைக் கொண்டே உருஸ் செய்துள்ளார்கள் என்பதையும் காண்நேரிட்டது. அது முதல் நமது உருஸ்களில் சாம்பிராணி புகை கலந்த தண்ணீரை குடிக்க பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது.

பஹ்ர்ஆம் அன்று இரவு இஷா தொழுகைக்கு பின்பு நாரிஸா பங்கிடுவது வழக்கமாக உள்ளது. நாரிஸா என்ற நற்கருமத்தின் மூலம் தாம் பெற்ற ஆன்மீக உணர்வினை பிறருக்கு வழங்கும் இறைநேசர்கள் முர்ஷித்கள் அதை பங்கிட துவங்கும்முன் தியானத்தில் ஆழ்ந்து தனது

முர்ஷித்தை மனக்கண் முன் கொண்டு வந்து அந்த முர்ஷித்திலிருந்து படிப்படியாக கடைசி முர்ஷிதாகியா இமாமானா மஹறிய மாஹூத் (அலை) அவர்கள் வரையிலான (இர்ஷாதி சில்சிலாவிலுள்ள) எல்லா பெயர்களையும் உள்ளத்தில் உச்சரித்து அல்லாவின் துணை யோடு முர்ஷித்களின் பெயரைக்கொண்டு பங்கிடத் துவங்குவார்கள். முர்ஷித் நற்கருமங்களை பங்கீடு செய்யும் போது தாம் பங்கீட்டை செய்யவில்லை எனவும் தனது முர்ஷித் செய்கின்றார் என்ற எண்ண-த்துடன் செயல்படுகின்றனர். இவ்வாறாக பெற்றபயனை பங்களிக்கும் முர்ஷித் முதல் வரிசை கிரமமாக இமாமனா மஹதிய மாஹூத் (அலை) வரையிலான எல்லா முர்ஷித்களாலும் பெறப்பட்ட நற்கருங்களின் பயன்களை நாரிஸா வழியாக வினியோகிக்கின்றனர். எனவே நாரிஸாவை பெறும் நற்பாக்கியம் பெற்ற மஹதவிகள் அதன் முக்கிய-த்துவம் கருதி அதனை இறை அச்சத்தோடு பெற்று பயனடைய வேண்டும் அன்று காலை சாம்பிராணி புகை கொடுத்த நீரை முதன் முதலாக முர்ஷித் குடித்த பிறகு மீதமுள்ள நீரை எல்லா சஹாபிகளு-க்கும் வழங்கப்படுகிறது கடைசியில் மீதமுள்ள நீரை முர்ஷித் குடித்து விடுவது வழக்கமாயுள்ளது-

## தஸ்பி

தஸ்பி என்பது நமது ஈமானின் முழக்கமாகும் நமது மார்க்க சம்பந்த நிகழ்ச்சிகளின் முடிவில் தஸ்பி முழங்கிய பின்பு கலைந்து செல்வது மஹ்தவிகளின் வழக்கமாகும் நமது ஜமாத்துகளில் சிலர் தினம் இரவு இஷா தொழுகைக்கு பின் தஸ்பி கூறி சலாம் கூறி செல்வது வழக்கமாய் கொண்டுள்ளனர். மற்றும் சிலர் தராபி, பஹர் ஆம், லைத்துல்கதர் இரவுகளில் மட்டும் தஸ்பி கூறி சலாம் கூறி செல்வது வழக்கமாய் கொண்டுள்ளனர்.

தஸ்பி கூறும் பழக்கம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்திலிருந்தே நடைமுறையிலுள்ளது. ஒரு முறை சஹாபிகளெல்-லாம் கூடியிருந்தே போது நபிபெருமான் (ஸல்) கூட்டத்தில் வெளி யாட்கள் யாராவது இருக்கின்றனரா எனக் கேட்டு அறிந்து இல்லை என்பதை உறுதி செய்த பின்பு கதவுகளை மூடிவிடும்படி கூறி ''ஜதத் ஓ ஈமானகும் (உங்களதுஈமானை உறுதிப்படுத்திக் கொள்வீர்களாக) என்று கூறினார்கள். எம்முறையில் ஈமானை உறுதிப்படுத்த என ஸஹாபிகள்கேட்க ரசூலேகரீம் (ஸல்) ''லா இலாஹா இல்லல்லாஹ்'' என சொல்வீர்களாக என உரத்த குரலில் கூறினார்கள் (ஆதாரம் இத்மாம் நியாமத் பக்கம் 25 மெவுலான ஆபித் குந்த்மீரி)

இதன் அடிப்படையில் மஹதவிகளிடையே தஸ்பி கூறும் வழக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. மார்க்கசம்பந்தமான நிகழ்ச்சிகளின் முடிவின் போது. பள்ளிவாசல்களில் தஸ்பி கூறப்படுகிறது. காலரா போன்ற தொற்றுநோய்கள் பரவுதல், புயல் மழைபோன்ற இயற்கை யின் சீற்றங்களின் போது தெருக்கள் சந்திக்கும் சந்திகளில் கூடிநின்று 'தஸ்பி' கூறும் வழக்கமுள்ளது.

தஸ்பி கூறும் வழக்கம் மஹதவிகளிடையே தான் காணப் படுகிறது. மஹதவி அல்லாதோர் இந்த தஸ்பியின் முழக்கத்தை ஏற்றுக்கொள்ளாததோடு அதை தடை செய்யும்படியான மார்க்க கட்டளை பிறப்பிக்கும்படி நாடாளும் மன்னர்களிடம் வற்புறுத்தினர். இதனால் மஹதவிகள் நாடு கடத்தப்பட்டனர். ஹஸ்ரத் ஷாநியாமத் (ரஸி) யும் அவரது ஸஹாபாக்களையும் தஸ்பி கூறியதற்காக படு கொலை செய்தனர். அவர்கள் ஷஹீத் ஆனார்கள்.

ஸ்ரீரங்கபட்டினத்தில் திப்புசுல்தானின் ராணுவத்தில் சுமார் 4000 மஹதவி போர்வீரர்கள் இருந்தனர். அவர்களது போர் திறமை யை கண்டு பலர் பொறாமை கொண்டனர். மஹதவி வீரர்கள் தினம் இரவு இஷா தொழுகைக்கு பிறகு உரத்தகுரலில் தஸ்பி கூறி வந்தனர் திப்பு சுல்தான் படையில் ஆங்கிலேயர்களின் ஒற்றர்கள் பலர் இருந்-தனர். அவர்களில் மீர்சாதிக் பிரபலமானவர். இவர் மஹதவிகளை படையிலிருந்து நீக்கி திப்புசுல்தானின் படைபலத்தை குறைக்க திட்ட மிட்டார். மஹதவிகள் லைலத்துல் கதர் இரவு அன்றும், மற்ற இரவுகளிலும் தஸ்பி முழங்குவது தங்களது இறைவணக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்துவதாக மஹதவி அல்லாதோர் திப்புசுல்தானிடம் முறையிட்டு தஸ்பி கூறுவதை தடைசெய்யுமாறு கோரினார்கள். திப்பு சுல்தானும் தஸ்பியைப் பற்றி தீர விசாரிக்காமல் மஹதவிகள் தஸ்பி கூறுவதை தவிர்க்கும்படி உத்தரவு பிறப்பித்து தளபதி மீர் சாதிக் மூலம் மஹதவி வீரர்களுக்கு தெரிவிக்கும்படி கூறினார். மீர் சாதிக் அந்த உத்தரவை மஹதவி வீரர்களுக்கு தெரிவிக்காததால் வழக்கப் படி இஷா தொழுகைக்கு பின் தஸ்பி கூறினர். அதனால் ஆத்திர மடைந்த திப்புசுல்தான் மஹதவி படை வீரர்களை பணி நீக்கம் செய்தார். திப்புசுல்தானின் படை வலுவிழந்தது. மீர்சாதிக் என்ற துரோகியின் திட்டம் நிறைவேறியது. திப்புசுல்தானின் வீழ்ச்சி சரித் திரத்தில் இடம் பெற்றது.

ஹைதராபாதில் நிஸாம் அல்முல்க் ஆஸிப் ஜாஸானியின் ஆட்சி நடைபெற்று கொண்டிருந்தது. ரம்ஸான் மாதமும் ஊழியர் களுக்கு சம்பளம் தரப்படாததால் அதனை கேட்டுப் பெற மன்னரை ஊழியர்கள் சந்தித்தனர். நிஸாமின் சபையில் இருந்த சிலர் மஹதவி களின்மீது பொறுமைகொண்டனர் அவர்கள்நிஸாமிடம் லைலத்துல் கதர் தொழுகைக்கு பின் மஹதவிகள் உரத்த குரலில் ஏதோ வாசகங் களைகூறுகின்றனர். அக்கூச்சலால்எங்களது இறைவணக்கமுறையின் பரிசுத்த தன்மைக்கு இடையூறு ஏற்படுகிறது என கூறினர். எனவே அவர்களது சம்பளத்தை தாமதமாக தந்தால் போதுமானது என நிஸாமிடம் கூறினர்.

நிஸாம் அல்முல்க் ஆஸிப் ஜாஸானி சபையில் இருந்தவர் களிடம் மஹதவிகள் உரத்தகுரலில் கூறும் அவ்வாசகங்களை குறித்து தன்னிடம் தருமாறு கூறினார். வாசகங்களை படித்த நிஸாம் அல் முல்க் ''மாஷா அல்லாஹ! இவ்வாசகங்களில் ஈமானின் நறுமணம் வீசுகின்றது இப்பரிசுத்த வாசகங்களை கூறுவதை தடுக்க முடியாது இவற்றை சொல்வதால் பரிசுத்த தன்மைக்கு இழுக்கு ஏற்படாது. இவ் வாசகங்களை உரத்த குரலில் கூச்சல்என்று கூறுவது அபத்தமானது'' என்றார். தனது அவையிலுள்ள இரு பிரமுகர்களை மஹதவிகளிடம் அனுப்பி மஹதவியினர் தமது விருந்தாளிகள் என தாம் கருதுவதாக வும் அவர்கள் முழங்கும் தஸ்பியை உரக்க ஒலித்து நான்கு திசை களிலும் வெகு தொலைவில் வசிப்போர் கேட்பதற்கு வசதியாக உரத்த குரலில் கூறும்படி கேட்டுக் கொண்டார். அத்துடன் லைலத்துல் கதர் இரவின் ஸஹர் உணவை மஹதவிகளுக்கு தன் சார்பில் அனுப்பி வைப்பதாகவும் அதை ஏற்றுக்கொள்ளும்மாறும் கேட்டுக்கொண்டார் அதே போல் லைலதுல்கதர் தொழுகைக்கு பின மஹதவிகளுக்கு விருந்து அளிக்கப்பட்டது. மறுநாள் நிலுவையாக இருந்த சம்பளம் தரப்பட்டது. அம்மன்னர் தம்மதிநுட்பத்தால் அனைவரின் நன்மதிப்பை பெற்றார்.

'அல்ஹம்து லில்லா' இப்பேர்பட்ட சிறப்பையும் தடைபட்டிருந்த காரியங்களையும் 'தஸ்பியின்' அனுக்கிரகத்தால் மஹதவிகள் பெற்றனர்.

இவ்வாறு இமாமனா மஹதிய மாவூத் (அலை) மேற்கொண்ட எல்லா மார்க்க வழிபாட்டு முறைகளும் ரசூலே கரீம் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்கள் மேற்கொண்டவற்றையே பின்பற்றியுள்ள தால் அவர்களது வழியில் மார்க்க வழிபாட்டு முறைகளை கடைபிடிக் கும் மஹதவிகளது எல்லா முறைகளும் சுன்னத் ஆகும், இவற்றை 'பித்தத்' என்று முத்திரை குத்தி தவிர்ப்பது அறியாமை மட்டுமல்லா மல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிப்பதாகும். இதை பித்தத் என்று எவர் கூறினாலும் அவர்கள் மஹதவிகளே ஆயினும் அவர்கள் நபிகள் நாயகத்தை அவமதிக்கும் பழியை ஏற்பது தடுக்க முடியாது. இதை உணர்ந்து மஹதவி சகோதரர்கள் இமாமனா மஹதவிய மாவூத்(அலை)எடுத்துக் கூறியுள்ள வழிமுறைகளிலிருந்து பிரழாமல் ஜன்னத் நஸீபை இழக்காமலிருப்பீர்களாக.

ஆமீன், யாரப்புல் ஆலமின்.

குறிப்பு : பெங்களூர், பக்கீர் சையத் முனவர் ரோஷன் அவர்களால் எழுதப்பட்டு ஹைதராபாத்திலிருந்து உருதுவில் வெளி யிடப்படும் 'நூரே ஹயாத்' 1998-ம் ஆண்டு மே மாத வெளியீட்டின் 3 வது பக்கத்தில் வெளியிடப்பட்ட இக் கட்டுரையின் தமிழாக்கம் மேலே தரப்பட்டுள்ளது.

15-8-1998